DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
---
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE : 29.01.2026

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No.84/2022 |
| Deposition of Witness for Prosecution | : | PW.8 |
| Name | : | ரஜினி |
| Father Name | : | தீர்த்தகிரி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | xxxx |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Deposition of witness for prosecution side solemnly affirmed by Tr. E. Govindharasu, Grade III Bench Clerk, of this court, on 29.01.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

**(A1 எதிரி ஆஜர்)**

**(A2 மற்றும் A3 எதிரிகள் ஆஜரில்லை). (A2 மற்றும் A3 எதிரிகளுக்காக 355 of BNSS Act–ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டது).**

**விசாரணை தொடங்கப்பட்ட நேரம்(01.00.P.M):–**

**முதல் விசாரணை:–**

நான் தற்போது கிருஷ்ணகிரி மாவட்டம், நல்லூர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியாற்றி வருகின்றேன். கடந்த 28.05.2022–ம் தேதி ஏற்காடு காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியாற்றினேன். காவல் உதவி ஆய்வாளர் ஆனந்த குமார் நிலைய அலுவலலில் இருந்தபோது வந்தனா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண்.130/2022, ச/பி. 294(b), 324, 506(i), 3 of PV Act 1992 and 4 of TNPWH Act 2002–ன் கீழ் வழக்கு பதிவு செய்தார். அவர் அந்த அசல் புகார் மனுவையும், முதல் தகவல் அறிக்கையையும் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார்.

பின்பு அவர் புலன் விசாரணை முடித்து வழக்கு கோப்பை மேல் விசாரணைக்காக என்னிடம் ஒப்படைத்தார். நான் வழக்கு கோப்பை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 28.05.2022–ம் தேதி 14.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகள் மகேஸ்வரன், முஸ்தாக்அலி ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் சாட்சி அ.சா.1 வந்தனாவை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகள் 1, 4, 5, 6 ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் காயம்பட்ட சாட்சிகள் அ.சா.1, அ.சா.4, அ.சா.6 ஆகியோரை சிகிச்சை அளித்த மருத்துவர் குமார் செல்வம் என்பவரை விசாரணை செய்து விபத்து பதிவேடு பெற்றேன். இவ்வழக்கின் புலன் விசாரணையில் எதிரிகள் எவ்வித பொது சொத்தையும் சேதப்படுத்தவில்லை என்று சாட்சிகளின் வாக்குமூலம் அடிப்படையில் தெரியவந்ததால் இவ்வழக்கின் ச/பிரிவை ச/பி. 294(b), 324, 506(i), 3 of PV Act 1992 and 4 of TNPWH Act 2002 விலிருந்து ச/பி. 294(b), 324, 427, 506(i) r/w 4 of TNPWH Act 2002–ன் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது ச/பி. 294(b), 324, 427, 506(i) r/w 4 of TNPWH Act 2002–ன் குற்ற அறிக்கை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

1. இவ்வழக்கில் நான் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவ தேதி என்பது 27.05.2022 சுமார் 09.00 மணி என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து ஏற்காடு காவல் நிலையம் 1/2 கி.மீ. தூரம் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையின் படி புகாரானது 28.05.2022 மதியம் 01.00 மணிக்கு தான் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள நேரம் தவிர்த்து மற்ற நேரத்தில் புகார் பெற்றப்பட்டது என்றால் தவறு. இவ்வழக்கில் பார்வை மகஜர் நான் தான் தயார் செய்தேன் என்றால் சரிதான். பார்வை மகஜர் 28.05.2022–ம் தேதி காலை 11.00 மணிக்கு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல, 14.30 மணிக்கு தயார் செய்யப்பட்டது. சம்பவ இடம் மூன்று ரோடு சந்திக்கும் இடம் என்றால் சரிதான். சம்பவ இடம் வழியாக தான் லேடீஸ் சீட் செல்ல முடியும் என்றால் சரியல்ல.

3. மூன்று ரோடு சந்திக்கும் இடத்தில் நிறைய கடைகளும், குடியிருப்புகளும் உள்ளன என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு சென்று சுமார் எவ்வளவு நேரம் விசாரணை செய்தீர்கள் என்றால் 2–3 மணி நேரம் விசாரணை செய்தேன். நான் சம்பவ இடத்தில் விசாரணை செய்யும் போது பொதுமக்கள் அங்கு இருந்தார்களா என்றால் இல்லை. இவ்வழக்கில் புலன் விசாரணை முழுவதும் நானே செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

4. புலன் விசாரணை செய்வதற்கு முன்பாக புகாரினை படித்து பார்த்தேன் என்றால் சரிதான். புகாரில் புகார்தாரரின் அண்ணன் கழுத்தில் இருந்த செயின் காணாமல் போனது குறித்து இறுதி அறிக்கையில் அதனை குறிப்பிட்டுள்ளீர்களா என்றால் இல்லை. நகை சம்மந்தமாக விசாரணை செய்ததாக அறிக்கையில் இல்லை என்றால் சரிதான். புகார்தாரரின் கார் அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத நபர்களால் உடைக்கப்பட்டது என குறிப்பிட்டுள்ள நிலையில் அவ்வாறு அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத நபர்கள் யார் என விசாரணை செய்தீர்களா என்றால் விசாரணை செய்தேன், அதனை குறிப்பிட்டுள்ளீர்களா என்றால் எதிரி வினோத்குமார் உடைத்தார். எந்த சாட்சியத்தின் அடிப்படையில் எதிரி வினோத்குமார் காரினை உடைத்தார் என தெரிந்துகொண்டீர்கள் என்றால் எனது இரகசிய விசாரணையில் தெரிந்துகொண்டேன் அவ்வாறு இரகசிய விசாரணை யாரிடம் மேற்கொண்டேன் என குறிப்பிடவில்லை என்றால் இல்லை.

5. முதல் தகவல் அறிக்கை மற்றும் புகாரில் "**எனது கடையின் அருகில் வரும்போது எங்களை பார்த்தவுடன் வினோத் குமார் என்பவர் எங்களை பார்த்து அவர்கள் வந்துவிட்டார்கள் வாங்கடா என கூறவே அவரது மகன் நீத்திஷ் மற்றும் அவரின் நண்பன் பிரசன்னகுமார் மற்றும் அவரின் நண்பர்கள் பெயர் தெரியாத அடையாம் தெரிந்த சிலர் வந்ததாக**" குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலே சொன்னது போல முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை நீங்கள் கவனமாக முதல் தகவல் அறிக்கை பரிசீலனை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

6. புகாரில் அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத நபர் வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத நபர் பற்றி விசாரணை செய்து அந்நபர் மீது நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் இல்லை. மேற்சொன்ன நபரை இவ்வழக்கில் எதிரியாக சேர்த்தாதற்கும், குற்றச்சாட்டு வனையப்படாததற்கும் தனிப்பட்ட காரணம் ஏதும் இல்லை என்றால் சரிதான்.

7. எதிரிகளின் கடையும், வாதியின் கடையும் இடையே ஒரு சுவர் மட்டுமே உள்ளது என்றால் சரிதான். எதிரிக்கும், வாதிக்கும் இடையே வியாபாரம் சம்மந்தமாக முன்விரோதம் இருந்தது என்பதனை விசாரணையில் தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன். புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள TN 54 Q 6053 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் சேதாரமான பகுதிகளை வழக்கிற்காக கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

8. சேதாரமான வாகனத்தின் புகைப்படத்தினை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கில் காயம்பட்ட நபர்களை பரிசோதனை செய்த மருத்துவரை எந்த தேதியில் விசாரணை செய்தேன் என குறிப்பிடவில்லை என்றால் தவறுதலாக குறிப்பிடவில்லை. மேற்படி மருத்துவரை இவ்வழக்கில் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

161(3) கு.வி.மு.ச. வாக்குமூலத்தில் எந்த தேதியில் சாட்சிகளிடம் வாக்குமூலம் பெறப்பட்டது என குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

9. எனது விசாரணையில் புகாரினை யார் எழுதியது என தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. புகார்தாரர்கள் வரும்போதே புகாரினை கொண்டு வந்தார்கள். புகார் எழுதிய நபர்களை இவ்வழக்கில் சாட்சியாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வாகனத்தின் உடைக்கப்பட்ட கண்ணாடியின் மதிப்பு ரூ.15,000/- என குறிப்பிடப்பட்டுள்ளது அவ்வாறு ரூ.15,000/- மதிப்புள்ள பொருள் சேதமாகியிருந்தால் பொது சொத்து சேதம் சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றால் சரிதான்.

10. புகாரில் கார் கண்ணடியை உடைத்தது அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத நபர் ஒருவர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த புகாரில் எதிரிதான் வாகனத்தின் கண்ணாடியை உடைத்தார் என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 27.05.2022-ம் தேதி சம்பவம் நடந்த இரவு புகாரினை பெறப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சம்பவம் நடந்த இரவே சாட்சிகளை விசாரணை செய்தேனா என்றால் இல்லை. சாட்சிகளை சம்பவ இடத்தில் வைத்து 14.30 மணிக்கு மேல் விசாரணை செய்தேன். சாட்சிகளை நிலையத்தில் வைத்து விசாரணை செய்தேன் என்றால் சரியல்ல.

11. முதல் தகவல் அறிக்கையில் எங்களை பார்த்தவுடன் 1-ம் எதிரி **"போன் செய்து அவர்கள் வந்துடாங்கடா என்று 1-ம் எதிரி கூறியதாகவும், பின்னிட்டு 2-3 எதிரிகள் சம்பவ இடத்திற்கு வந்தார்கள்"** என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை. வழக்கு சம்பவத்திற்கு முன்பே நான் உறவினர் கடைக்கு செல்லும் போது எதிரி வினோத் என்னை அவமதிக்கும் வகையில் நடந்துகொள்வார் என அ.சா.1 புகாரில் குறிப்பிட்டுள்ளாரா என்றால் இல்லை.

12. 1-ம் எதிரி வினோத் இருசக்கர வாகனத்தின் சக்கரத்தினை அ.சா.1-ன் தம்பி திரேன் காலில் ஏற்றியதாக புகார்தாரின் புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடவில்லை. அ.சா.1 தனது புகாரில் நான் தடுக்க சென்றபோது

நித்திஷ்குமார் என்னை தள்ளிவிட்டு என்னையும், எனது கணவர் பிரேம் தீப்சிங்கையும் கட்டையால் நித்திஷ் மற்றும் பிரசன்னகுமார் அடித்தார்கள் என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்படவில்லை. புகாரில் எந்த நபர் அ.சா.1 மற்றும் அவரது கணவரை ஆபாசமான வார்த்தைகளால் திட்டியதாக சொல்லப்படவில்லை என்றால் நித்திஷ் மற்றும் பிரசன்னகுமார் மற்றும் அடையாளம் தெரியாத நபர்கள் திட்டியதாக குறிப்பிட்டுள்ளது.

13. 1-ம் எதிரி ஆபாசமான வார்த்தையால் அ.சா.1 மற்றும் அவரது கணவரை திட்டியதாக புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பிரசன்னகுமார் கல் மற்றும் கட்டையால் எனது கணவரை அடித்தார் பின்பு கூர்மையான பொருள் கொண்டு எனது கணவரின் வயிற்றில் குத்திவிட்டார் அது சாவியா அல்லது வேறு பொருளா என தெரியவில்லை என புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறு குறிப்பிடப்படவில்லை. எங்கள் காரில் ஏறி எங்கள் கடை முன்பு வந்தபோது நித்திஷ் மற்றும் பிரசன்னகுமார் காரின் கண்ணாடியை அடித்து உடைத்ததாக புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்படவில்லை.

14. இவ்வழக்கில் அ.சா.1-ன் மாமியாரை 28.05.2022-ம் தேதி மதியம் 02.00 மணிக்கு விசாரணை செய்தீர்கள் என்று சொன்னால் இல்லை. 28.05.2022-ம் தேதி மதியம் 12.00 மணியிலிருந்து 03.00 மணிக்குள் வாதி காவல் நிலையத்திற்கு வரவில்லை என்றால் சரிதான். நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் புகார்தாரர்களுக்கும் எதிரிகளுக்கும் ஏற்கனவே இருந்த காழ்புணர்ச்சியின் காரணமாக எதிரிகளுக்கு எதிராக புகார் கொடுக்கப்பட்டு அதில் புகார்தாரர்களுக்கு ஆதரவாக பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

15. சம்பவ நேரம் இரவு 10.15 மணி என்றால் சரியல்ல. 2-ம் எதிரி மற்றும் 3-ம் எதிரி எங்களது காரின் மீது ஏறி நின்றுகொண்டிருந்தார்கள் அப்போது காரின் முன்பக்க கண்ணாடி உடைந்துவிட்டது யார் உடைத்தார்கள் என்று குறிப்பாக தெரியாது என புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

புகார்தாரர் குடும்ப உறுப்பினர்கள் தவிர வழக்கு சம்பவத்தை கண்ணுற்றதாக தனிநபர் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றால் சாட்சிகள் எவரும் முன்வராததால் விசாரணை செய்யவில்லை. வழக்கு ஆவணங்களை நிலையத்தில் வைத்து தயார் செய்ததால் தான் தனிநபர் சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. தனிநபர் சாட்சிகளை எவரும் முன்வராததால் விசாரணை செய்யவில்லை என கூறுவது பொய் என்றால் சரியல்ல. குற்றப்பத்திரிக்கையில் புகார்தாரரின் குடும்ப உறுப்பினர்களை சாட்சிகளாக சேர்த்துள்ளதன் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு செல்லாமல் சாட்சியை விசாரணை செய்ததாக இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

16. புகார்தாரர் காரில் வரும்போது ஏற்பட்ட விபத்தினால் காயம் ஏற்பட்டதை கொண்டு எதிரிகளின் மீது பொய்யாக முன் விரோதத்தினை மனதில் வைத்து புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்தினால் தான் காயம் ஏற்பட்டது என்பதும், அவ்வாறு வாகனத்தினை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியிருந்தால் மேற்படி உண்மை தெரிந்திருக்கும் என்றும், அதனை மறைக்கவே வாகனத்தினை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. 27.05.2022-ம் தேதி இரவு புகார்தாரர் பாதிக்கப்பட்டு காவல் நிலையத்திற்கு வந்து பின்னர் ஏற்காடு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக காவலர்களால் அனுப்பப்பட்டார்கள் என்ற விவரத்தினை விசாரணையில் தெரிந்துகொண்டேனா என்றால் அனுப்பவில்லை. எதிரிகளுக்கும், சம்பவத்திற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றும், சம்பவ நேரத்தில் எதிரிகள் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் கட்டையால், கம்பியால் புகார்தாரர் குடும்பத்தினரை அடித்ததாக கூறிப்பிட்டுள்ள நிலையில் கட்டை மற்றும் கம்பியை கைப்பற்றி நீதிமன்றத்தில் வழக்கு சொத்தாக ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான்.

17. குற்றப்பத்திரிக்கையில் சொல்லியுள்ளபடி குற்றம் நடந்திருந்தால் முறையாக கைப்பற்றி வழக்கு சொத்தை ஒப்படைத்திருப்பேன் என்றும், அவ்வாறு நடக்காததால் தான் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)**

**(விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 02.09.P.M)**

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

R ELANCHEZHIAN

Digitally signed by R ELANCHEZHIAN
Date: 2026.01.29 14:13:59 +0530

District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.